**Starting time 12.51 P.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.94/2017**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 24.04.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : லட்சுமி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling: | | Age | : |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**: என் தகப்பனார் முதல் பிரதிவாதி எனது பெயருக்கு 05.06.1996 தேதியன்று ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் எனது அப்பாவின் அப்பா காலத்திலிருந்து எனது அப்பா நான் உள்ளிட்டோர் அனுபவித்து வருகிறோம் என்றால், ஆமாம். தாவா சொத்து எனக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றால், எனது பெயருக்கு அரசு பட்டா கொடுத்துள்ளது. என்னுடைய அனுபவத்தின் பேரில் தான் அரசு பட்டா எனக்கு கொடுத்துள்ளது. அதற்கு யாரும் ஆட்சேபனை செய்யவில்லை.

2. எனக்கு திருமணமாகும் வரையிலும் எனது தகப்பானருடன் தான் வசித்து வந்தார் என்றால், ஆமாம். அதனால் என்னுடைய அனுபவத்தின் பேரில் எனக்கு பட்டா வழங்கப்பட்டது பொய் என்றால், சரியல்ல. எனக்கு திருமணமான சமயத்தில் எனது கணவர் மேஸ்திரியாக

இருந்தார் என்றால், ஆமாம். 1988-ல் என் தகப்பனாருக்கு நெய்வேலியில் வேலை கிடைத்து அவர் சென்றபோது திருமணமான என்னை நம்பி அவர் முதலில் கட்டிய வீட்டில் என்னை குடி வைத்துவிட்டு அதனடிப்படையில் ஒரு உயிலை எனது பெயருக்கு எழுதி வைத்துவிட்டு சென்றார் என்றாலும், அந்த உயிலை மற்ற ஆவணங்களுடன் பெட்டியுடன் சேர்த்து எடுத்து வந்து உயிலின் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்து கொண்டேன் என்றால், சரியல்ல.

3. என் தகப்பனார் உடன் பிறந்தவர் எத்தனை பேர் என்றால், என் தகப்பனார் ஒருவர்தான். என் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால், 2 தம்பிகள். எனக்கு திருமணமான சமயத்தில் என் தம்பிகள் இருவருமே இளவர்களாக இருந்தார்கள் என்றால், ஆமாம். என் தகப்பனாருக்கு வேலை கிடைத்ததால் என் தம்பிகளுடன் நெய்வேலியில் வசித்தார் என்றாலும், என்னை அந்த வீட்டில் இருந்து கொள்ள சொன்னார் என்றால், சரியல்ல. என் தகப்பனார் நெய்வேலியில் எங்கு வேலை பார்த்தார் என்றால், நெய்வேலி சுரங்கத்தில் அட்டன்டராக வேலை பார்த்தார்.

4. அந்த சமயத்தில் நானும் என் தாயார் மற்றும் என் தம்பிகள் என் தகப்பனாருடன் தான் இருந்தோம் என்றால், ஆமாம். என் தகப்பனாருக்கு நெய்வேலியில் வேலை கிடைத்த பிறகுதான் எனக்கு திருமணமானது என்றால், ஆமாம். எனக்கு திருமணமான பின்பு தான் தாவா சொத்தில் வீடு கட்டப்பட்டதா என்றால், ஆமாம். எனது கணவரின் சொந்த சம்பாத்தியத்தின் மூலம் கட்டினேன். என் கணவர் சவுதி அரேபியாவுக்கு எப்போது சென்றார் என்றால், 1991 ல். எத்தனை வருடங்கள் அங்கு இருந்தார் என்றால், 4 அல்லது 4-1/2 வருடம்.

5. நான் குடியிருந்து வரும் தாவா முதல் இன வீடு 40, 50 லட்சம் போட்டு கட்டினேனா என்றால், 20 லட்சம், 2-வது வீடு 2016-ல் கட்டினேன். எனது தகப்பனார் எந்த வருடம் பணி ஓய்வு பெற்றார் என்றால், 2016. நெய்வேலி சுரங்கத்தில் என் தகப்பனார் ஓய்வு பெற்ற போது ஓய்வூதிய பலன்கள் வாங்கினாரா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. முதல் வீட்டை என் தகப்பனார்தான் கட்டி என்னை குடி வைத்துவிட்டு 2-வது வீட்டையும் அவர் கட்டி குடியிருந்து வருகிறார் என்றால், சரியல்ல. என் கணவர் சவுதியில் வேலை பார்த்து வந்த பணத்தை

கொண்டுதான் நான் வீடு கட்டியதாக கூறுவதே தவறு என்றாலும், என் கணவர் சவுதிக்கு வேலைக்கே செல்லவில்லை என்றாலும், சரியல்ல. அவ்வாறு அவர் சென்றிருந்தால் அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 01.05 P.M

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**